# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 2009 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் (ஆயுதந்தாங்கிய படைகள்) (திருத்தச்) சட்டம்

*(2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2009, மே மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அநாதைகள் ஒய்வூதியத் திட்டம் (ஆயுதந் தாங்கிய படைகள்) (திருத்தச்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஒ. 82/2006*

**1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அநாதைகள் ஒய்வூதியத் திட்ட (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

**1.** *இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அநாதைகள் ஒய்வூதியத் திட்ட (ஆயுதந்தாங்கிய படைகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அநாதைகள் ஒய்வூதியத் திட்ட (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டத்தில் 3அஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அநாதைகள் ஒய்வூதியத் திட்ட (ஆயுதந்தாங்கிய படைகள்) சட்டம், அதன் 3அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*"பிரிவுகள் 3, 3அ அத்துடன் 3ஆ என்பவற்றின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாக வேண்டிய ஆட்கள்.*

*3அஅ. இச்சட்டத்தின் பிரிவுகள் 3, 3அ அத்துடன் 3ஆ, என்பவற்றின் நோக்கங்களுக்கு "ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர்" என்பது -*

*(அ) ஆண் ஒருவராக இருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையின் அலுவலர் அல்லது படைவீரர் ஒருவராக வுள்ள ; அல்லது*

*(ஆ) ஆண் ஒருவராக இருந்து விடயத்திற்கேற்ப அரச இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை கடற்படையின் நிரந்தர கடற் படையின் அலுவலர் அல்லது கடலோடி ஒருவராகவுள்ள ; அல்லது*

(இ) ஆண் ஒருவராக இருந்து விடயத்திற்கேற்ப அரச இலங்கை விமானப் படையின் அல்லது இலங்கை விமானப் படையின் நிரந்தர விமானப் படையின் அலுவலர் அல்லது விமானி ஒருவராகவுள்ள

எவரேனும் ஆள் என்று பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 3இ, 3ஈ, 3உ மற்றும் 3ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 3ஆ என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் பிரிவுகள் 3இ, 3ஈ, 3உ அத்துடன் 3ஊ என்றாற் போன்று பயனுறுதலும் வேண்டும்.

*ஓய்வூதியத் திட்டத்தை ஆயுதந்தாங்கிய படைகளின் தொண்டர் படையினதும் நிரந்தர ஒதுக்குப் படையினதும் தொண்டர் ஒதுக்குப் படையினதும் உறுப்பினர்களுக்கு நீடித்தல்.*

3இ. (1) இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதிக்கு முந்திய தேதியொன்றில் ஆயுதந்தாங்கிய படைகளின் தொண்டர் படையின் உறுப்பினர் ஒருவராக வந்தவரும், ஓய்வூதிய நலன்களுடன் ஓய்வு பெற்றிருந்தவருமான அல்லது அத்தகைய படையில் அத்தகைய தேதியன்று அத்தகைய உறுப்பினராக தொடர்ந்திருக்கின்றவருமான ஆளெவரும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையினால் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதிக்கு முன்னர் அதன் பொருட்டு விண்ணப்பமொன்றைச் செய்வதன்மீது ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பதற்கு முடிவு செய்யலாம்.

(2) விடயத்திற்கேற்ப ஆயுதந்தாங்கிய படைகளின் நிரந்தரப் படையிலிருந்து அல்லது தொண்டர் படையிலிருந்து ஓய்வு பெற்றபின்னர் அல்லது விடுவிக்கப்பட்டபின்னர், இப்பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதிக்குமுன்னர் விடயத்துக் கேற்ப ஆயுதந் தாங்கிய படைகளின் நிரந்தர ஒதுக்குப் படைக்கு அல்லது தொண்டர் ஒதுக்குப் படைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளவரும் அத்துடன் ஓய்வூதிய நலன்களுடன் ஓய்வுபெற்றுள்ளவரும் அல்லது அத்தகைய ஒதுக்குப்படை

யில் அத்தகைய உறுப்பினராக அத்தகைய தேதியன்று தொடர்ந்திருக்கின்றவருமான ஆளெவரும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வாறான அத்தகைய தேதிக்கு முன்னர் அதன் பொருட்டு விண்ணப்பமொன்றைச் செய்வதன் மூலம் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பதற்கு முடிவு செய்யலாம்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட உட்பிரிவு களில் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ஒன்றில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அன்றேல் (2) ஆம் உட்பிரிவின்கீழ் முடிவொன்றைச் செய்யாமல் விதித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இறக்கு மிடத்து, அவர், மனைவியை அல்லது பிள்ளை யொன்றை அல்லது மனைவியையும் பிள்ளை யொன்றையும் அல்லது மனைவியையும் பிள்ளை களையும் விட்டுச் செல்வாராயின், அவர் ஓய்வூ தியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பதற்கு முடிவு செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) உதவுதொகை செலுத்துநர் ஒருவராக வருவ தற்கு முடிவு செய்துள்ள எவரேனும் ஆள் அல்லது ஓய்வூதியத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் களாக வருவதற்கு முடிவு செய்திருப்பவர்களாகக் கருதப்பட்ட ஆட்களின் விடயத்தில், அத்தகைய மரணமெய்தியவரின் அலுவல்களை நிர்வகிக்கும் ஆள், தோதான ஆயுதந்தாங்கிய படைக்கு அத்தகைய ஆள் அணிதிரட்டப்பட்ட தேதியன்று தொடங்கி விடயத்திற்கேற்ப முடிவுசெய்யும், ஓய்வு பெறும் அல்லது இறப்பின் தேதிவரை உதவு தொகையின் எல்லா நிலுவைகளையும் அவற்றின் மீது ஆண்டொன்றுக்கு நாலு சதவீதப்படி வட்டியு டன் சேர்த்து ஓய்வூதியத் திட்டத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

(5) மேலேயுள்ள (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட முடிவொன்று இறுதியானதாதல் வேண்டும்.

*தொழில் முறைக் கடமைகள் முதலிய வற்றைப் புரிகையில் ஏற்பட்ட ஊறுகள் காரணமாக ஊனமுற்ற வர்களாகும் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப் பினர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை நீடித்தல்.*

3ஈ. (1) தொழில்முறைக் கடமைகளை அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் வேறு எவையேனும் கடமைகளைப் புரிகையில் ஏற்பட்ட ஊறுகளின் காரணமாக அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளின் விளைவாக ஊனமுற்றவராகின்றவரும் விடயத்திற்கேற்ப இலங்கை தரைப்படையின், இலங்கைக் கடற்படையின், அல்லது இலங்கை விமானப் படையின் மருத்துவச் சபையால் இராணுவ சேவைக்குத் தகுதியற்றவரெனத் தீர்மானிக்கப்பட்டவரும் 55 வயதை அடையும்வரை சம்பளத்தையும் படியையும் பெறுகின்றவருமான

(அ) இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையின், நிரந்தர ஒதுக்குப் படையின், தொண்டர் படையின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படையின் ஆண் அலுவலர் அல்லது ஆண் படைவீரர் எவரும் ; அல்லது

(ஆ) இலங்கை கடற்படையின் நிரந்தரப் படையின், நிரந்தர ஒதுக்குப்படையின், தொண்டர் படையின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படையின் ஆண் அலுவலர் அல்லது கடலோடி எவரும் ; அல்லது

(இ) இலங்கை விமானப் படையின் நிரந்தரப் படையின், நிரந்தர ஒதுக்குப் படையின், தொண்டர் படையின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படையின் ஆண் அலுவலர் அல்லது விமானி எவரும்

வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதிக்குமுன்னர் அதன்பொருட்டு

விண்ணப்பமொன்றைச் செய்வதன்மூலம் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவர் ஒருவராக இருப்பதற்கு முடிவுசெய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் அப்பிரிவின்கீழ் முடிவொன்றைச் செய்யாமல் விதித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இறக்குமிடத்து, அவர் மனைவியை அல்லது ஒரு பிள்ளையை, மனைவியையும் ஒரு பிள்ளையையும் அல்லது மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுச் சென்றால் அவர் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக முடிவுசெய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பிரிவு 3இ என்பதன் உட்பிரிவு (4), மற்றும் (5) என்பவற்றின் ஏற்பாடுகள் இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஆளொருவருக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*இப்பிரிவு நடைமுறைக்கு வந்தபின்னர் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராக வரும் ஆளொருவர் உதவுதொகை செலுத்துநர் ஒருவராதல்.*

3உ. இப்பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆயுதந் தாங்கிய படைகளின் நிரந்தர ஒதுக்குப்படையின், தொண்டர்படையின் அல்லது தொண்டர் ஒதுக்குப் படையின் உறுப்பினரொருவராக வரும் ஆளெவரும் அத்தகைய தேதியிலிருந்தும் அதன்பின்னரும் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராதல் வேண்டும்.

*பிரிவுகள் 3இ, 3ஈ அத்துடன் 3உ என்பவற்றின் நோக்கங்களுக்கு நிரந்தர ஒதுக்குப் படையின் உறுப்பினர் ஒருவரின் வரைவிலக்கணம்.*

3ஊ. பிரிவுகள் 3இ, 3ஈ அத்துடன், 3உ என்பவற்றின் நோக்கத்திற்கு “ஆயுதந்தாங்கிய படைகளின் நிரந்தர ஒதுக்குப்படையின், தொண்டர் படையின் அல்லது தொண்டர் ஒதுக்குப்படையின் உறுப்பினர் ஒருவர்” என்பது

(அ) இலங்கைத் தரைப்படை தொடர்பில் தரைப்படைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் விடயத்திற்கேற்ப

நிரந்தரப்படையின் அலுவலர் அல்லது படைவீரர் ஒருவர் எனக் கருதப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) இலங்கை கடற்படை தொடர்பில் கடற் படைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ், விடயத்திற்கேற்ப நிரந்தர கடற்படையின் அலுவலர் அல்லது கடலோடி ஒருவர் எனக் கருதப்படுதல் வேண்டும் ; அல்லது

(இ) இலங்கை விமானப்படை தொடர்பில் விமானப்படைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் விடயத் திற்கேற்ப நிரந்தர விமானப்படையின் அலுவலர் அல்லது விமானி ஒருவர் எனக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக் கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது:-

"பொருள் கோடல்.

8. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"உதவுதொகை செலுத்துநர்" என்பது சட்டத்தின்கீழ் உதவுதொகை செலுத்துநர் ஒருவராகவுள்ள அல்லது உதவுதொகை செலுத்துநர் ஒருவராகக் கருதப்படுகின்ற ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் எனப் பொருள்படும் என்பதுடன், சட்டத்தின் பிரிவு 3இ அல்லது 3ஈ என்பதன் ஏற்பாடுகளின் கீழ் உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருப்பதற்கு முடிவுசெய்துள்ளதாகக் கருதப் படுகின்ற உறுப்பினர் ஒருவரையும் உள்ளடக் கும் :

**5**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்